

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் திண்டிவனத்தில் ஒன்றிய மோடி அரசை கண்டித்து நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில் கழகத் துணை பொது செயலாளரும்,வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கண்டன உரை நிகழ்த்தினார். உடன் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர், தலைமைக் கழக பேச்சாளர் குத்தாலம்கல்யாணம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், செந்தமிழ் செல்வன், தலைமை தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.




கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மோடி அரசுக்கு எதிராக மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் வடலூரில் நடைபெற்றது. மாவட்டக் கழகச் செயலாளர் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் வி.சிவகுமார் வரவேற்றனார். தலைமை கழகப் பேச்சாளர்கள் சன்.சங்கர், சோம.செந்தமிழ்ச்செல்வன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். மாவட்டக் கழக துணை செயலாளர்கள் அ.ஞானமுத்து, ஆர்.சக்திவேல், மேயர் சுந்தரிராஜா, மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், மகளிர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### இரயிலில் இருந்து கீழே தள்ளப்பட்ட கர்ப்பிணிக்கு நிதி உதவி

# மருத்துவ சிகிச்சைக்கான செலவு முழுவதையும் அரசே ஏற்கும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, பிப். 10-

வேலூர் மாவட்டம், கே.வி.குப்பம், சீதாராமன்பேட்டை அருகில் இரயில் பெட்டியிலிருந்து கீழே தள்ளிவிட்டு பலத்த காயமடைந்த கர்பிணிப் பெண்ணின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அளித்ததுடன் - மருத்துவ சிகிச்சை செலவு முழுவதையும் தமிழ்நாடு அரசே ஏற்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

திருப்பூர் மாவட்டத்தில், வசித்துவரும் நான்கு மாத கர்ப்பிணிப் பெண் தனது சொந்த ஊருக்குச் செல்வதற்காக கடந்த 06.02.2025 அன்று பிற்பகல் கோயம்புத்தூர் - திருப்பதி விரைவு இயிலில் பெண்களுக்கான பெட்டியில் பயணித்த போது, ஜோலார்பேட்டை இரயில் நிலையத்தில் அப்பெட்டியில் ஏறிய கே.வி.குப்பம், பூஞ்சோலை கிராமம், சின்ன நாகல் பகுதியைச் சேர்ந்த ஹேமராஜ் என்பவன் அப்பெண்ணிற்கு பாலியல் தொந்தரவு அளிக்க முயன்று அப்பெண்ணைத் தாக்கி, வேலூர் மாவட்டம், கே.வி.குப்பம், சீதாராமன் பேட்டை அருகில் ஓடும் இரயிலிலிருந்து கீழே தள்ளிவிட்டதில் அந்தப் பெண் பலத்த காயம் அடைந்துள்ளார், அதன் தொடர்ச்சியாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் அந்தப் பெண்ணிற்கு நேற்று முன்தினம் (8.2.2025) கருச் சிதைவு ஏற்பட்டுள்ளது என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் காயமடைந்து வேலூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக இராணிப்பேட்டை தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் அப்பெண்ணிற்கு உயர் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன். தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் அப்பெண்ணின் முழு மருத்துவச் செலவையும் தமிழ்நாடு அரசே ஏற்கும்.

இந்தக் குற்றச் சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளி ஹேமராஜ் உடனடியாக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளான்.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் அப்பெண்ணின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### திருநாவலூர் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர், மாவட்டக் கவுன்சிலர்

# ஜி.ஆர்.வசந்தவேல் இல்லத் திருமண விழா!

## அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் இன்று நடைபெறுகிறது!

உளுந்தூர்பேட்டை, , பிப். 10-

தமிழக முதல்வர், கழகத் தலைவர், சமூக நீதி காவலர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் மற்றும் தமிழக துணை முதல்வர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்களின் நல்வாழ்த்துக்களுடன் கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், எலவத்தடி, கௌசலை அம்மாள் இல்லம், தமிழ் ஆசிரியர், புலவர் கோ.இராசவேலு- இரா.கௌசலை அம்மாள் இவர்களின் மகன்வழிப் பேரனும், கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், புலவன்குப்பம், கே. இராசாங்கம் - இரா. சின்னம்மாள் இவர்களின் மகள்வழிப் பேரனும் திருநாவலூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் ஜி. ஆர்.வசந்தவேல் - குணசுந்தரி ஆகியோரின் மகனுமான மருத்துவர் வ.சந்தர போஸ்க்கும், கடலூர்



மாவட்டம், புவனகிரி வட்டம், ஆயிபுரம் மதுரா, மணல்மேடு உடற்கல்வி ஆசிரியர் அ.கோவிந்தசாமி - கோ.சாவித்திரி இவர்களின் மகன்வழிப்பேத்தியும், மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், கடக்கம், இரா. இராஜகோபால் - இரா. சேதுஆயாள் இவர்களின் மகள்வழிப் பேத்தியும் கோ.உதயகுமார் - திருமதி உ.சுதா ஆகியோரின் புதல்வியுமான மருத்துவர் உ.சுவேதாவுக்கும் மணவிழா இன்று (பிப்ரவரி 10 - திங்கட்கிழமை) காலை 9 மணி முதல் 10:30 மணி வரை கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர் பேட்டை அடுத்த பதூர் வேதாந்தா பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற உள்ளது.

இவ்விழாவிற்கு வருபவர்களை கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ, தெற்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. ஆகியோர் வரவேற்கின்றனர்.

பொதுப்பணிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமை தாங்கி திருமணத்தை நடத்தி வைக்கிறார்.

மேலும் விழாவில் வேளாண்மை- உழவர்நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே பன்னீர்செல்வம், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கழகத் துணை பொது செயலாளர் ஆ.ராசா எம்பி, கழக கொள்கை பரப்பு இணைச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன், சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் சி.எம்.செல்வகணபதி எம்.பி., துரை.ரவிக்குமார் எம்.பி, மாநில மருத்துவர் அணி துணை செயலாளர் மருத்துவர் எ.வ.வே.கம்பன் மற்றும் கழகஎம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள், மாவட்ட செயலாளர்கள், அனைத்துக் கட்சி முக்கிய பிரமுகர்கள், தொழிலதிபர்கள், அரசு அதிகாரிகள், குடும்பத்தினர், உறவினர்கள் உள்பட பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்த உள்ளனர்.



இராணிப்பேட்டை மாவட்ட திமுக சார்பில் நடைபெற்ற, மோடி அரசுக்கு எதிரான மாபெரும் கண்டன பொதுகூட்டம் மாவட்ட கழக செயலாளர் கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி தலைமையில் நடைபெற்றது. இதில் நகர செயலாளர் பி. பூங்காவனம், மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் மு.சிவானந்தம், துரை மஸ்தான், குமுதா குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.இதில் திராவிட இயக்க சிந்தனையாளர் நாஞ்சில் சம்பத், தலைமை கழக பேச்சாளர் ஆவடி. காமு.ஜான் கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் ஆர்.வினோத்காந்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் J.L.ஈஸ்வரப்பன்.எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்பிபுரையாற்றினர். மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.வினோத் நன்றி தெரிவித்தனர்.

### கல்விக் கடன் திட்டத்தை – முதலிடத்தில் உள்ள

# கல்வி நிறுவனங்களுக்கு வெளியே உள்ள மாணவர்களுக்கு விரிவுபடுத்தப்படுமா?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, பிப்.4-

வித்யாலட்சுமி கல்விக் கடன் திட்டத்தை முதலிடத்தில் உள்ள கல்வி நிறுவனங்களுக்கு வெளியே உள்ள மாணவர்களுக்கு விரிவுபடுத்த ஒன்றிய அரசு எடுத்துள்ளதா? இந்தத் திட்டத்தின் கீழ் கடன் பெறுவதற்கான CIBIL மதிப்பெண் தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை தளர்த்த ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா என மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற தொகுதி எம்பி கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

இதுபற்றிய விபரம் வருமாறு :-

வித்யாலட்சுமி கல்விக் கடன் திட்டத்தை முதலிடத்தில் உள்ள கல்வி நிறுவனங்களுக்கு வெளியே உள்ள மாணவர்களுக்கு விரிவுபடுத்த ஒன்றிய அரசு எடுத்துள்ள சீரிய நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் யாவை?

இந்தத் திட்டம் முழுமையாகச் செயல்படும் என எதிர்பார்க்கப்படும் காலம்> மற்றும் தற்போது நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் மாணவர்களுக்கு ஏதேனும் இடைக்கால ஆதரவு உள்ளதா? அப்படியானால் அதன் விவரங்கள் யாவை?

ஏழை மாணவர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் கடன் பெறுவதற்கான CIBIL மதிப்பெண் தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை தளர்த்த ஒன்றிய அரசிடம் ஏதே



னும் திட்டம் உள்ளதா? அப்படியானால் அதன் விவரங்கள் யாவை?

இந்தத் திட்டத்தின் நிலையான உறுதித்தன்மையை ஒன்றிய அரசு உறுதி செய்யும் விதம் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது பட்ஜெட் ஒதுக்கீட்டை அதிகரிப்பதற்கு அல்லது அதற்கு ஈடாக உயர்த்தி சரி செய்வதற்கு திட்டம் ஏதேனும் உள்ளதா? அப்படியானால்> அதன் விவரங்கள்? பட்டப்படிப்புக்குப் பிறகு நிதி சவால்களை எதிர்கொள்ளும் மாணவர்களுக்கு கடன் திருப்பிச் செலுத்தும் விதிமுறைகளை எளிதாக்குவதற்கு அல்லது கடன் தள்ளுபடி வழங்குவதற்கு ஏதேனும் ஏற்பாடுகள் உள்ளதா? அப்படியானால்> அதன் விவரங்கள் யாவை? என்று கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகத்தின் ராஜாங்க அமைச்சர் டாக்டர் சுகந்தா மஜூம்தர் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் :-

ஒன்றிய அரசின் பி.எம். வித்யாலட்சுமி ஒரு புதிய துறைத் திட்டம். இது நவம்பர் 6, 2024 அன்று தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் உயர் தர உயர்கல்வி நிறுவனங்களில் (QHEIS) தகுதி அடிப்படையிலான சேர்க்கை பெறும் மாணவர்களுக்கு பிணையம் இல்லாத மற்றும் உத்தரவாதம் இல்லாத கல்விக் கடன் வழங்கப்படுகிறது.

இந்த உயர்கல்வி நிறுவனங்கள் பின்வரும் அளவுகோல்களின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றன :-

ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட NIRF இன் சமீபத்திய பட்டியலில் ஒட்டு மொத்த / வகை சார்ந்த தரவரிசையில் முதல் தர வரிசைப்படுத்தப்பட்ட 100 உயர்கல்வி நிறுவனங்கள்; ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட NIRF இன் சமீபத்திய பட்டியலில் மாநில / யூனியன் பிரதேச அரசுகளின் நிர்வாகத்தின் கீழ் முதல் 200 தர வரிசைப்படுத்தப்பட்ட உயர்கல்வி நிறுவனங்கள்; இதோடு இந்திய ஒன்றிய அரசின் நிர்வாகத்தின் கீழ் மீதமுள்ள அனைத்து உயர் கல்வி நிறுவனங்கள் 2024-25 கல்வியாண்டிற்கான QHEI-களின் பட்டியலைத் தயாரிப்பதற்கு NIRF 2024 தரவரிசை பரிசீலிக்கப்பட்டுள்ளது. மேலும் இதற்காக 860 QHEI-கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். PM வித்யாலட்சுமி திட்டத்தின் கீழ் கல்விக் கடன்களை அனுமதிப்பதற்கு மாணவர்களின் CIBIL மதிப்பெண் ஒரு அளவுகோல் அல்ல.

மேலும் 8 லட்சம் வரை குடும்ப ஆண்டு வருமானம் உள்ள மாணவர்களுக்கு இந்தத் திட்டம் 10 லட்சம் வரையிலான கடன்களுக்கு 3% வட்டி மானியத்தை வழங்குகிறது. வேறு எந்த உதவித் தொகை அல்லது கல்விக் கடனில் வட்டி மானியம் பெறாத ஒரு லட்சம் புதிய மாணவர்களுக்கு இந்த வட்டி மானியம் கிடைக்கும். இந்த வட்டி மானியத்தின் காலம் தற்காலிக காலம் அதாவது பாட நெறி காலம் மற்றும் ஒரு வருடம் ஆகும். 2024-25 முதல் 2030-2031 வரையிலான வட்டி மானியத்தின் மொத்த செலவு 3600 கோடி. பிரதான் மந்திரி உச்சதர் சிக்ஷா புரோட்சஹான் கடன் உத்தரவாத நிதியின் கீழ் ஒன்றிய அரசின் கல்விக் கடன்களுக்கான திட்டம் (PM-USP CGF SEL), 7.50 லட்சம் வரை அனுமதிக்கப்பட்ட கல்விக் கடன்களுக்கு கடன் உத்தரவாதம் வழங்கப்படுகிறது. நிலுவையில் உள்ள கடனில் உத்தரவாதக் காப்பீடு 75% வரை ஆகும்.

மேலும் இந்திய வங்கிகளின் மாதிரி கல்விக் கடன் திட்டத்தின் கீழ் கல்விக் கடனுக்கான திருப்பிச் செலுத்தும் காலம் தடைக் காலத்திற்குப் பிறகு 15 ஆண்டுகள் வரை ஆகும்.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.

### கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வடலூரில் – ஒன்றிய நிதிநிலை அறிக்கையில்

# தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசுக்கு எதிரான கண்டன பொதுக்கூட்டம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார்!

கடலூர், பிப்.9

கடலூர் கிழக்கு மாவட்ட திமு கழகம் சார்பில், ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு என்ற பெயரைக்கூட உச்சரிக்காமல் தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசுக்கு எதிரான கண்டன பொதுக்கூட்டம், வடலூர் வள்ளலார் பேருந்து நிலைய திடல் எதிரில், 08.02.2025, சனிக்கிழமை மாலை 6 மணியளவில் நடைப்பெற்றது.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயளாலர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமை தாங்கி சிறப்பு ரையாற்றினார்.

குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றிய கழக செயலாளர் பொறியாளர்வி.சிவக்குமார் வரவேற்புரையாற்றினார்.

மாவட்ட துணை செயலாளர்கள் அ.ஞானமுத்து, ஆர்.சக்திவேல், சுதா சம்பத் ஒன்றிய கழக செயலாளர்கள் ஆர்.நாராயணசாமி, டி. காசிராஜன், பி.சுப்பிர மணியன், வடலூர் நகர கழக செயலாளர் தன. தமிழ்செல்வன், நகர மன்ற தலைவர் சு. சிவக்குமார், குறிஞ்சிப்பாடி பேரூர் செயலாளர் கே.வி.பி.சங்கர், மாவட்ட தொழிலாளர அணி அமைப்பாளர் கி.தண்டபாணி, நகர மன்ற துணை தலைவர் சுப்பு ராயலு, குறிஞ்சிப்பாடி பேரூராட்சி தலைவர் கோகிலா குமார், துணை தலைவர் ஆர்.ராமர், ஒன்றிய அவைத் தலைவர் ஆசிரியர் ராமமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். தலைமை கழக பேச்சாளர்கள் சன்.சங்கர், சோம.செந்தமிழ்செல்வன் சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்வில் கடலூர் மேயர் சுந்தரி ராஜா, ஒன்றிய கழக செயலாளர்கள்: காட்டுமன்னார்கோவில் மேற்கு அ.முத்துசாமி, திருமுட்டம் கிழக்கு தங்க. ஆனந்தன், கம்மாபுரம் தெற்கு கே.ஆர்.ராயர், பரங்கிப்பேட்டை தெற்கு ஆர்.கலையரசன், கடலூர் வடக்கு கே.ஆர்.தனஞ்செயன், கடலூர் தெற்கு ஆர். விஜய சுந்தரம்,குமராட்சி கிழக்கு த.சங்கர், குமராட்சி தெற்கு ம.சோழன்,

கீரப்பாளையம் கிழக்கு வி.ஜி.பி.சபாநாயகம், புவனகிரி கிழக்கு எம்.மனோகரன்,கம்மாபுரம் மத்திய பி.சுந்தரபாண்டியன், கீரப்பாளையம் மேற்கு டி.திருமூர்த்தி, திருமுட்டம் வடக்கு எஸ்.செந்தில்குமார், திருமுட்டம் மேற்கு கே. ஆர்.கே.கோவிந்தராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் வ.ஞானசேகரன், பொதுக்குழு உறுப்பினர்கள்: ஜேம்ஸ் விஜயராகவன், ப.வெற்றி வேல், என்டி. கணேசன், பா. கோதண்டபாணி

பேரூர் செயலாளர்கள்: காட்டுமன்னார்கோவில் எஸ்.கணேசமூர்த்தி, சேத்தியாதோப்பு வழக்கறிஞர் ப.மனோகரன், திருமுட்டம் பூ.செல்வகுமார், அண்ணாமலை நகர் க.பழனி, பரங்கிபேட்டை பேரூராட்சி மன்றத் தேன்மொழிசங்கர், கெங்கைகொண்டான் பேரூராட்சி மன்றத் தலைவர் பரிதா அப்பாஸ், மாவட்ட கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்: இளைஞரணி ஜி.கார்த்திகேயன், மீனவரணி வி.செல்வ பாரதி, விவசாய அணி பொன்.பன்னீர்செல்வம், விவசாய தொழிலாளர் அணி எம்.ராமசாமி, தொமுச பழனிவேல், வழக்கறிஞர் அணி அருள்ஜோதி, வர்த்தகர் அணி ரெங்கநாதன், ஆதிதிராவிடர் நலக் குழு ஆர்.பரந்தாமன், சிறுபான்மை அணி முகமது யூனுஸ்,

தகவல் தொழில்நுட்ப அணி ஏ.ஜாபர் அலி, மகளிர் அணி அமுதாரணி, மகளிர் தொண்டரணி மனோரஞ்சிதம், நெசவாளர் அணி நல்ல தம்பி , அயலக அணி வாசு உள்ளிட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய,நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பொதுக்குழு உறுப்பினர் கே.பி.ஆர்.பாலமுருகன் நன்றியுரையாற்றினார்.